செ.வெ.எண்: 219 நாள்: 15.04.2021

**கோவிஷீல்டு, கோவேக்ஸின் தடுப்பூசிகளின் செயல் திறன், எதிர்ப்பு சக்தியும் ஒரே அளவிளானது.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தேவையான அளவு கோவிட்-19 தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோவிட் தடுப்பூசி போடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.04.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் தடுப்பூசித் திருவிழாவை விளம்பரப்படுத்தும் வகையில் 11.04.2021 முதல் 14.04.2021 வரை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 4 வாகனங்கள் மூலம் விளம்பரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள வாகனங்களின் மூலம் கொரோனா தடுப்பூசி குறித்தும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைக்க இப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் கொரோனா தடுப்பூசி போடும் பணியினை இன்றைய தினம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2020 ஏப்ரல் 20ந்தேதியன்று முதல் கோவிட்-19 நோயாளி கண்டறியப்பட்டதிலிருந்து இன்றுவரை மொத்தம் 12,000த்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் கண்டறியப்பட்டு 96% மேற்பட்ட நபர்கள் குணமடைந்து நலமுடன் உள்ளனர். கொரோனா நோய் தொற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை

மேற்கொள்ளும் பொழுது கொரோனா தொற்றிலிருந்து முழுவதுமாக குணமடைந்து தங்களது வீட்டிற்கு செல்லலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றைய தினம் 49 நபர்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 1,500க்கும் மேற்பட்ட படுக்கைகள் கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க தயார் நிலையில் உள்ளது. தற்போது கொரோனா பாதிக்கப்பட்ட 323 நோயாளிகளில் 157 நபர்கள் புதுக்கோட்டையிலுள்ள மருத்துவமனைகளிலும், 123 நபர்கள் வெளி மாவட்ட மருத்துவமனைகளிலும், 43 நபர்கள் வீட்டுத்தனிமைப்படுத்தலிலும் இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

மாவட்டத்தில் நாளொன்றுக்கு 70க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் ஒவ்வொரு நாளும் 1500க்கும் மேற்பட்ட ஆர்டி-பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே போன்று காய்ச்சல் முகாம்களில் கொரோனா பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் பொது மக்களிடம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. தனியார் நிறுவனங்கள், திரையரங்குகள் போன்றவற்றில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் போன்றவை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விதிகளை மீறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கோவிஷீல்டு, கோவேக்ஸின் தடுப்பூசிகளின் செயல் திறன் மற்றும் அதனால் கிடைக்கும் எதிர்ப்பு சக்தியும் ஒரே அளவிளானது, எவ்வித வேறுபாடும் கிடையாது. இரண்டு தடுப்பூசிகளாலும் எவ்விதமான பக்கவிளைவுகளும் ஏற்படுவதில்லை. எனவே தகுதியுள்ள அனைவரும் இந்த இரண்டு தடுப்பூசிகளில் ஒன்றினை கட்டாயம் போட்டுக்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் தேவையான அளவு கோவிட்-19 தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது.** இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் தடுப்பூசி திருவிழா நடைபெற்று கொண்டுள்ள பொது சுகாதாரத்துறையின் 13 நடமாடும் வாகனத்தினையும், புதுக்கோட்டை நகராட்சியின் சார்பில் கோவிட் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் 10 விளம்பர வாகனங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பூவதி, இணை இயக்குநர் (ஊரகநலப்பணிகள்) மரு.ராமு, நகராட்சி பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன், பொது சுகாதார துணை இயக்குநர்கள் மரு.கலைவாணி, மரு.விஜயக்குமார், கோட்டாட்சியர் டெய்சிகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**